# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## நான்காம் வருட முதலாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு

## 2013/2014 (மார்ச் - ஏப்ரல் - 2019)

## EDS – 4153 கல்விச் சமூகவியல் (Sociology of Education)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்குவிடைதருக.

---

## பகுதி I

1. அ. மனிதக் குழுக்கள் மற்றும் சமூக வாழ்க்கை முறை மற்றும் சமூக நடத்தை பற்றி ஆராய்வது சமூகவியலாகும்" என்பதால் நீங்கள் விளங்கிக்கொள்வது யாதென்பதனை தெளிவுபடுத்துக? (04 புள்ளிகள்)

   ஆ. கல்விச் சமூகவியலுடன் தொடர்புடைய பகுதிகளில் "சர்வதேசபிரஜை பெறும் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

   இ. கல்விச் சமூகவியலின் 1930 களின் பின்னருள்ள வளர்ச்சி தொடர்பாக சுருக்கமாக மதிப்பிடுக? (06 புள்ளிகள்)

2. அ. சமூகவகுப்பு என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்தி அதன் வகைப்பாடுகளை பட்டியற்படுத்துக? (02 புள்ளிகள்)

   ஆ. சமூக வகுப்பு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களுள் மூன்றினைக் (03) குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (06 புள்ளிகள்)

   இ. கற்கும் பாடசாலையைத் தெரிவு செய்வதில் சமூக வகுப்பு தொடர்பாக பெற்றோருக்குள்ள ஆதங்கங்களுக்கு நீர் முனவைக்கும் ஆலோசனைகள் (06) ஆறினைத் தருக? (06 புள்ளிகள்)

அ. சமூகநகர்வு (Social Mobility) என்ற எண்ணக்கருவை பொருத்தமான இரு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக? (04 புள்ளிகள்)

ஆ. மனித நடத்தைகளை யாதார்த்தபூர்வமாக அறிந்து கொள்வதற்கு உதவக்கூடிய துறையாக சமூகவியலைக்கொள்ளலாம். இத்துறையினால் கல்விக்கான முக்கியத்துவங்கள் இரண்டினைக்கூறி (02) கூறி சுருக்கமாக விளக்குக? (05 புள்ளிகள்)

இ. சமூகவியற்கொள்கைகள் கல்வித்துறையில் பண்புரீதியாகவும், அளவுரீதியாகவும் மனிதனைப் பகுப்பாய்வுசெய்து வாய்ப்புப் பார்க்கத்தக்கவை என்பதற்கான இரு (02) ஆதாரங்களை முன்வைத்து சுருக்கமாக விளக்குக? (05 புள்ளிகள்)

## பகுதி II

4. அ. "மாணவர்கள் வாழும் சமூகச் சூழல் பற்றிய தெளிவான புரிதல் அவசியமாகும்." இந்த வகையில் ஆசிரியர்கள் கல்விச் சமூகவியலை அறியவேண்டியதன் முக்கியத்துவங்களைக் குறிப்பிட்டு அதனை பொருத்தமான உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக? (12 புள்ளிகள்)

   ஆ. "விஞ்ஞானரீதியான தன்மை கொண்ட துறைகளின் செயற்பாடுகள்தான் இன்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன." அந்தவகையில் சமூகவியலானது ஒரு விஞ்ஞான ரீதியான துறை என்பதற்கான ஆதாரங்களை முன்வைத்து விளக்குக? (12 புள்ளிகள்)

5. அ. சமூக நகர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் (03) குறிப்பிட்டு அவற்றினை நடைமுறை உதாரணங்களைக்கொண்டு தெளிவுபடுத்தி கல்வியில் அவை ஏற்படுத்தும் தாக்கத்தினையும் விபரிக்குக? (12 புள்ளிகள்)

   ஆ. "இலங்கையில் வழங்கப்பட்டுவரும் இலவசக் கல்வியானது அனைத்து மாணவர்களினதும் உயர்கல்விக்கான சமூக நகர்வினை ஏற்படுத்தியுள்ளது" என்ற கூற்றினை என்பதற்கான பொருத்தமான உதாரணங்களுடன் விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க? (12 புள்ளிகள்)

6. அ. புதிய வகிபங்குகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப கல்வியில் மாறும் தன்மை உண்டாகிறது இதனை மைய மாகக்கொண்டு மீள் சமூகமயமாக்கலை பாடசாலைகளிலும் வீடுகளிலும் எவ்வாறு இணைந்த செயலாக மாற்றமுடியும் என்பதனைப் பகுப்பாய்வு செய்க? (10 புள்ளிகள்)

   ஆ. சமூகவகுப்பிற்கு ஏற்ப கல்வி வாய்ப்புக்கள் பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியிலும் எவ்வாறு அமைகின்றன என்பதை நடைமுறை உதாரணங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிட்டு விளக்குக? (14 புள்ளிகள்)

அ. பாடசாலைக்கும் அப்பாடசாலை கொண்டுள்ள அயற்சமூகத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகளில் காணப்படும் சிக்கல் நிலைகளைக் குறைத்து அத்தொடர்புகளை சீர்செய்துகொண்டு பாடசாலை அபிவிருத்திக்கு அதனை எவ்வகையில் பயன்படுத்துவீர் என்பதனை விளக்குக? (12 புள்ளிகள்)

ஆ. கலாசாரத்தின் அம்சங்களினைக் குறிக்கும் இலட்சணங்களை பாதுகாக்க வேண்டிய பாடசாலைகளின் இன்றைய நிலைகள் தொடர்பாக விளக்குவதோடு எதிர்காலத்தில் அவை அழியாது பாதுகாப்பதற்கு கல்விக்கூடாக அவற்றினை எவ்வாறு வழிசமைக்கலாம் என்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக? (12 புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)